# கவிதை குறித்த முரசு விவாதங்கள்
## Poetry Arguments of Murasu

முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி / Dr.M.S.Sri Lakshmi[1]

***Abstract***

This research paper focuses the literary arguments about the traditional and verse poetry in Singapore. Similarly the same arguments were very popular in seventies in Tamil Nadu. In Malaysia, there was a good response among youngsters for the verse poetry. But traditional poets in both Malaysia and Singapore never supported. As an open minded poet Mr Ilangovan from Singapore was a pioneer in modern verse Poetry. Likewise Mr K T M Iqbal also wrote the verse poetry followed by Ilangovan. In order to create the awareness on the trend in Tamil Poetry field Mr V T Arsau, editor of Tamil Murasu initiated a literary argument in 1991-1992. These articles depict the writing skills, argumentative skills and also the literary knowledge of the participants like KTM Iqbal. But few members of public who took part in the arguments were ignorant about the aim of the arguments. These arguments were indirectly helping to develop the local poetry scene.

**Key Words:** Poetry arguments, Tamil Murasu, Singapore Tamil Literature, Verse poetry, Fundamental of arguments.

### முன்னுரை

தமிழ்க்கவிதை காலந்தோறும் புதிய பாடுபொருள்களையும் ,புதிய வடிவங்களையும் தாங்கித் தன்னைத்தானே செழுமைப்படுத்திக் கொள்கிறது. சங்ககாலம் தொட்டே காணப்பட்ட இப்போக்கு தமிழ் இலக்கிய வரலாற்றின்வழி நாம் அறியக்கிடக்கும் செய்தியாகும். பாரதி தோற்றுவித்த வசனகவிதை தமிழ்க்கவிதைக்குப் புதுவரவு. பின்னர்த்தோன்றிய புதுக்கவிதை வடிவத்தை ஏற்க மனமில்லாதவர்கள் புதுக்கவிதையை இழித்தும் பழித்தும் பேசினர். மரபுக்கவிதை குறித்தும் புதுக்கவிதை குறித்தும் காரசாரமான விவாதங்கள் தமிழகத்தில் எழுந்தன. மரபுக்கவிஞர்கள் புதுக்கவிதை எழுதித் தம்மைப் புதுப்போக்கிற்குத் தயாராக்கிக்கொண்டனர். தமிழக இலக்கியப்போக்கின் சாயல்கள் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் எதிரொலித்தன.

### விவாதத்திற்கான சூழல்

எழுபதுகளில் புதுக்கவிதை x மரபுக்கவிதை குறித்த விவாதங்கள் தமிழகத்தில் நிகழ்ந்தன. ஆயின் புதுக்கவிதை அங்கே புதுப்பொலிவுடன் வளர்ச்சிப் பாதையில் நடைபோட்டது. மலேசியாவிலும் புதுக்கவிதையால் ஈர்க்கப்பட்டனர். சி.கமலநாதன் புதுக்கவிதையின் முன்னோடியாக விளங்கினார். எம் ஏ. இளஞ்செல்வன் போன்ற இளையர்கள் தங்கள் படைப்பாற்றலின் மூலம் புதுக்கவிதைத்துறையை வளர்த்தனர். சிங்கையில் இளங்கோவன் எழுபதுகளில் புதுக்கவிதைத்துறையின் முன்னோடியாக விளங்கினார். அவரைத்

[1] The author is an Associate Lecturer in Singapore University of Social Sciences, Singapore. Visaka_2004@yahoo.com

தொடர்ந்து க.து.மு.இக்பால் புதுக்கவிதை எழுதினார். ஆயின் மிகப்பெரும்பாலோர் மரபுக்கவிதையை உயர்த்தியும் புதுக்கவிதையைத் தாழ்த்தியும் பேசினர். கவிதையில் உயர்வு தாழ்வுக்கு இடமே இல்லை என்பதை அவர்கள் உணரவில்லை. கவிதைத்துறை எப்படி மாற்றங்களை உள்வாங்குகிறது? அத்துறையில் நிகழும் புதுமைப்போக்குகள் யாவை? என்ற சிந்தனை இல்லாமல் இருக்கவே தமிழ்முரசு பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் திரு வி.டிஅரசு (வை.திருநாவுக்கரசு) கவிதைத்துறையின் நோக்கினையும் போக்கினையும் அவர்கள் அறிந்து கொள்ளும்படி விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பினார். விவாதமே அதற்குச் சிறந்த வழி என்று தீர்மானித்தார். ஆகவே விவாதத்திற்குரிய சூழலை உருவாக்கிக் கொடுத்தார். விவாதப்பிரியரான அவருக்கு அது கைகொடுத்தது. கவிதையிலேயே கவிதையைப்பற்றி விவாதம் முதலில் எழுந்தது சிறப்பு.

## மரபுக்கவிதை, புதுக்கவிதை குறித்த சர்ச்சை:

சிங்கப்பூரில் இளங்கோவன் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டு "விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து" என்னும் புதுக்கவிதைத் தொகுப்பையும், எண்பதுகளின் முற்பகுதியில் " மௌனவதம்; என்னும் புதுக்கவிதைத் தொகுப்புநூலையும் வெளியிட்டார். இதன் மூலம் இவர் புதுக்கவிதைத்துறையின் மூலவர் என்னும் பெருமைக்குரியவர் ஆகிறார். இக்காலகட்டத்தில் க.து.மு.இக்பால் பல புதுக்கவிதைகளை எழுதிக்கொண்டிருந்தார். ஆயின் தொண்ணூறுகளின் முற்பகுதியில் புதுக்கவிதை எழுதுவோர்க்கும் மரபுக்கவிதை எழுதுவோர்க்கும் இடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டன. கவிதை வடிவிலேயே இம்மோதல்கள் நிகழ்ந்தன. இவற்றை 'இலக்கியக் கருத்துப்போர்' எனத் தமிழ்முரசு குறிப்பிடுகிறது. இக்கருத்துப்போரினை வளர்க்கும் வகையில் மற்றக் கவிஞர்களையும் பங்குகொள்ளும்படிக் கவிதைப்பகுதியின் பொறுப்பாசிரியரும் தமிழ்முரசின் ஆசிரியருமான வை.திருநாவுக்கரசு அழைத்துள்ளார். "கவிஞர் அமலதாசனை உரைவீச்சு வீசச் செய்த கவிதை, கடந்த ஞாயிறு (10.11.91) முரசில் வெளிவந்த கவிஞர் க.து.மு.இக்பாலின் "வரவைச் செலவில் எழுதலாமா?" என்னும் கவிதை ஆகும். ஏனைய கவிஞர்களும் இந்த இலக்கிய சர்ச்சையில் இறங்கிச் சொற்சிலம்பம் ஆடலாமே?" (தமிழ்முரசு, 17.11.91) என வேண்டுகோள் விடுத்துக் கருத்துப்போரில் களமிறங்கத் தூண்டுகிறார். சில வாரங்களுக்கு இச்சர்ச்சை தொடர்கிறது.

புதிய பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் வெளிநாட்டுத்திறனாளர்களைச் சிங்கப்பூர் அரசு வரவழைத்த காலட்டத்தின் தொடக் கத்தில் கவிதை குறித்த கருத்துப்போரினைத் தமிழ்முரசு ஆசிரியர் வளர்க்க நினைத்ததற்குச் சில காரணங்களைக் கூறமுடியும்.

1. பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் உள்ளூர் இலக்கிய வளர்ச்சியில் காட்டிய அக்கறை.
2. கவிஞர்களின் எண்ணிக்கை பெருகவேண்டும்.
3. புதிய திறமைகளை அடையாளம் காணவேண்டும்.
4. பத்திரிகையில் சூடான ஆர்வத்தைத் தூண்டும் விஷயங்களை வெளியிட்டு வாசகர் எண்ணிக்கையைப் பெருக்குவது.
5. பத்திரிகை விற்பனையை அதிகரிப்பது.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் சிந்தித்தால் காலத்துக்கேற்ற இலக்கிய வடிவங்களில் எழுத்தாளர்களை எழுத ஊக்கப்படுத்திய பத்திரிகையாளராக வை.திருநாவுக்கரசு திகழ்வதையும் பொறுப்புமிக்க பத்திரிகை ஆசிரியராக அவர் விளங்கியிருப்பதையும் மறுத்துவிடமுடியாது. க.து.மு.இக்பாலின் கவிதையும் வை.திருநாவுக்கரசின் நோக்கத்திற்கு அரண் செய்வதாகவே அமைகிறது.

*"இலக்கியத்தில்*

*திருப்பமோ திசைமாற்றமோ*

*ஒன்றும் தேசத்துரோகமல்ல"*

'காலத்தின் கட்டாயம் புதுக்கவிதை' என்று இக்பால் கருதியதோடு அன்றித் தாமே முன்மாதிரியாய்ப் பற்பல புதுக்கவிதைகளை எழுதிவந்தார். இவர் நல்ல மரபுக்கவிஞர் என்பதைச் சிங்கைத் தமிழ் இலக்கிய உலகம் நன்கறியும். ஆகவேதான் புதுக்கவிதையை மரபுத்தாயின் மகளாகப் அவரால் பார்க்கமுடிகிறது .

*"மரபுக் கவிதையின்*

*மணிவயிற்றில் உதித்ததுதான்*

*புதுக்கவிதை"*

என்று கூறியதோடு அமையாது,

*"தாயின் குணங்கள்*

*மகளிடமும் உண்டு*

*கண்டு கொள்ளக்*

*கண்கள்தான் வேண்டும்"*

எனப் பாடுவதன் மூலம் மரபுக்கவிஞர்களின் சிந்தனைக் கண்கள் அகலத் திறக்கவேண்டும் என்னும் அவரின் விழைவு தெரிகிறது. தமிழகம், இலங்கை , மலேசியா ஆகிய நாடுகளில் தொடக்ககாலத்தில் புதுக்கவிதைக்கு எதிர்ப்பு இருந்தாலும் பின்னர் அந்நிலை மாறிப் புதுக்கவிதைத்துறை செழித்து வளர்ந்துள்ளதை அறியமுடிகிறது. ஆயின் சிங்கப்பூரில் இளங்கோவன், இக்பால் ஆகியோரைத் தவிரத் தொடக்ககாலத்தில் புதுக்கவிதையைக் கவிதைவடிவமாக ஏற்றுக்கொள்ளாத நிலையே நிலவியது. இந்நிலை மாற இவ்விலக்கிய சர்ச்சை அவசியமாயிற்று.

*"புதுக் கவிதையை*

*ஏடாசிரியர்கள்*

*ஏற்றுக்கொள்வதும்*

*பேராசிரியர்கள்*

*பெருமைப்படுத்துவதும்*

*இலக்கணத்தை இழிவுபடுத்துவதல்ல*

*ஏற்றப்படுத்துவது"*

என்று எழுதியதோடு அமையாமல்

*"தூக்கு வாக்குப்*

*போக்கு நாக்கு*

*நீக்கு நாக்கோ"*

என எள்ளலோடு கவிதையை முடித்திருப்பது சிறப்பு. வெறும் சந்த நயத்துக்காகப் பொருளற்ற எதுகை மோனைகளில் மரபுக்கவிஞர்கள் காட்டும் அக்கறையை ,மெனக்கெடுதலைக் கேலி செய்கிறது கவிதையின் முடிவு.

அமலதாசன் தாம் எடுத்துக்கொண்ட விவாதப்பொருளை விளக்கி எதிர்வாதம்புரிவதை விட்டுவிட்டு "அறிவாளிகள் அறிவாளிகள்தாம் " என்னும் தலைப்பில் உரைவீச்சில் தம் மறுப்பினைத் தெரிவிக்கிறார். "புது" என்னும் அடைமொழியைப் பாரதியின் வசனகவிதைக்குச் சூட்டாதது ஏன்? அடுக்குமொழிபேசி அரசியலுக்கு வந்த தலைவர்கள் ஏன் தங்களுக்குப் புதுக்கவிஞர்கள் என்று புகழாரம் சூட்டிக்கொள்ளவில்லை என்று கேட்டுள்ளார். விவாதத்தில் அறிவுப்பூர்வமாகக் கருத்துக்களை முன்வைக்கவில்லை. மேலும் விவாதத்துக்கு வலுச்சேர்க்க இயலாத மொண்ணையான கருத்துக்களை முன்வைக்கிறார்.ஆகவே அமலதாசன் விதண்டாவாதம் புரிகிறார் என்று கூறவேண்டியுள்ளது. அனைத்துக்கும் மேலாகக் கவிதைக்கலை மரபுக்கவிஞர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்பதுபோல ஏகபோக உரிமை கொண்டாடுகிறார். அறிவுத்தளத்தில் விவாதத்தை அணுகிப் புதுமையை வரவேற்காமல் மரபுக்கவிதைகளுக்குக் கேடு செய்வதாகக் கருதிக்கொண்டு உணர்வுத்தளத்தில் மரபுக்குக்கேடு செய்பவர்களைத் தண்டிக்கவும் தயாராகிறார்.

*"மரபுக்குக் கேடு செய்தால்*

*மாறாத சூடு வைப்போம்"*

என்று சொல்லினால் சுடுகிறார். ஆகவே இலக்கியக்கருத்துப்போர் என்று கட்டம்கட்டிச்(IN THE BOX) சர்ச்சைக்கு அழைக்கவேண்டிய கட்டாயம் "விவாதப்பிரியரான''வை திருநாவுக்கரசுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

அமலதாசனின் சூடான பதில் கண்டு கற்பூரன் என்னும் புனைபெயருடன் "காரணம் புரியவில்லை " என்னும் தலைப்பில் ஒருவர் எழுதிய உரைவீச்சுக் கவிதை 08.12.91 அன்று தமிழ்முரசில் பிரசுரமானது.

*"பெயரால் நமக்குள்ளே*

*பேதங்கள் இருக்கவேண்டாம்"*

என்று ஆலோசனை கூறுவதோடு உடைகளில் புதுமையைக் கண்ணியமாய் ஏற்கும்போது கவிதையில் ஏன் புதுமையை ஏற்கத் தயங்குகிறார்கள்; இதன் காரணம் புரிவில்லை என்று தம் கலக்கத்தினைப் பதிவுசெய்கிறார் . புதுக்கவிதைக்குத் தம் வரவேற்பையும் கூறுகிறார்.

*"புதிய வரவுனக்குப்*

*பொலிவதனைத் தந்திடுமே"*

எனத் தமிழ்மொழிக்குப் புதுக்கவிதை வளம்சேர்க்கும் என்னும் தம் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

தி.துரைராஜு " சுவையா ? சுமையா ?" என்னும் தலைப்பில் (15.12.91) புதுக்கவிதையை வரவேற்கிறார். அவரின் பார்வையில் ஓர் இளம் வாசகன் என்ற முறையில் மரபுக்கவிதை சுமையாகவும்,புதுக்கவிதை சுகமாகவும் நியாயமாகவே சொல்லப்பட்டுள்ளது. பெரும்பாலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் சிங்கப்பூர்ச்சூழலில் மரபுக்கவிதையைப் படிப்பதற்குரிய மொழிவளத்தை இளையர்கள் பெற்ருப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது என்பதால் இக்கருத்து ஏற்புடையதாக அமைகிறது.

*"சந்தங்கள் கூடிவந்தாலும்*

*மரபுக்கவிதைகளுக்குச் சொந்தங்கள் அதிகமில்லை.*

*வார்த்தைகள் ஆடிவருவதால்*

*புதுக் கவிதைகளுக்கு*

*இளம் உள்ளங்களே சொந்தம்!"*

என்று கூறுவதோடு புதுமையை மகிழ்ச்சியோடு வரவேற்கும் இளையர்களின் நிலைப்பாட்டைத் தன் கவிதையின் வழி உறுதி செய்கிறார்.

17.11.91 அன்று பிரசுரமான அமலதாசனின் கவிதைக்கு மறுப்பாக 15.12.91 இக்பால் " புதிது என்ன பொல்லாத சொல்லா ?" என வினாத்தொடுத்துத் தம் கருத்தை வலியுறுத்துகிறார். இவரின் கவிதையில் அமலதாசனின் கவிதை பற்றிய அறிவு கேள்விக்குரியதாகிறது. அமலதாசனின் ளிகீஐஎஐழிஅஃஜகூஙு சந்தேகிக்கப்படுகிறது. " நுணலும் தன வாயால் கெடுவதுபோல"ப் பாரதி, அண்ணாதுரை, கருணாநிதி போன்றோரை உதாரணம் காட்டப்போய்த் தமக்குத் தாமே இழிவுதேடிக் கொண்டார் அமலதாசன் என்று எண்ணவேண்டி உள்ளது. தம் சொந்தக்கருத்துக்களைக் கூறாமல் "உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம் " என்னும் கலைஞர் கருணாநிதியின் வரிகளை இரவல் பெற்றதால் கவிஞர் இக்பாலின் குறைகூறலுக்கு இலக்காகிறார். அமலதாசனின் பதிலைப் படிக்கும்போது ஒரு விஷயத்தை முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல் அதாவது மேலோட்டமாகத் தெரிந்துகொண்டு விவாதக்களத்தில் இறங்குவது எவ்வளவு இழிவைத்தரும் செயல் என்பதை உணரமுடிகிறது. இந்நிலை அமலதாசனுக்கு மட்டும் உரியதன்று. இன்னது என்று இலக்கியத்தை ஓரளவு கூடத் தெரிந்துகொள்ளாதவர்கள் புகழுக்கு ஆசைப்பட்டோ அல்லது சமூகஅங்கீகாரத்தைப் பெறுவதற்காகவோ இலக்கியத்தைக் கையிலெடுக்கும் பலருக்கும் ஏற்படும் விளைவு. இது சிங்கப்பூர்த்தமிழ்ச் சூழலில் அன்றுதொட்டு இன்றுவரை நிரம்பவே உண்டு. இந்தநிலை அமலதாசனுக்கு இக்பால் கொடுக்கும் பதிலில் பளிச்சிடுகிறது. புதுமையை வரவேற்பதால் அமலதாசன் போன்றோர் எதை இழக்கப்போகிறார்கள்?

என இக்பால் கேட்டிருப்பது உண்மையே! நியாயமான கேள்வியும் கூட!

மரபுக்கவிதைக்குப் புதுக்கவிதை விரோதியல்ல என்னும் கருத்தினை 22.12.91 அன்று வெளிவந்த தமிழ்முரசில் மீண்டும் பதிவுசெய்துள்ளார் . "யாப்பிலக்கணம் புதுக்கவிதையை ஆதரிக்கிறது" என்னும் கவிஞரின் கருத்தினை வெளிப்படுத்தும் கவிதை, இச்சர்ச்சையின் முக்கியத்துவம் கருதி முழுவதுமாய்க் கீழே தரப்பட்டுள்ளது.

*"கட்டுப்பாடு , மரபு என்று*
*களைப்பின்றிச் சத்தமிடும்*
*யாப்புப் படித்த கவிகளே ; இல்லை*
*ஆப்புப் பிடித்த கவிகளே!*
*வெண்டளையால் இயலும் வெண்பாவும்*
*எழுத்தெண்ணிப் பாடும் கட்டளைக்*
*கலித்துறையும் கொண்ட*
*நமது யாப்பிலக்கணம்"*

*இவற்றோடு,*
*"செந்தொடை*
*ஆசிரியத்துறை*
*இணைக்குறள் ஆசிரியப்பா*
*ஆகியவை மூலம்*
*புதுக்கவிதைக்கு எத்தனையோ*
*ஆண்டுகளுக்கு முன்னமேயே!*
*பச்சை விளக்குக் காட்டியிருக்கிறதே;*
*கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடக்*
*கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறதே!*
*நுனிப்புல் மேய்பவர்களுக்கு*
*இந்த நுட்பம் நுழையுமா மூளையில்?*
*கவிதைகளைச் செந்தொடையாக,*
*அதாவது எதுகை மோனை என்னும்*
*எந்த அலங்காரமும் இல்லாமல் எழுத*
*யாப்பிலக்கணம் அனுமதி தருகிறது!*
*இது புதுக்கவிதையின் கூறல்லவா?"*

*"செந்தொடை நந்தொடையில்லை*
*என்பீர்களா?*
*யாப்பிலக்கணத்தை மீண்டுமொருமுறை*
*திருப்புங்கள்.*

*ஆசிரியத் துறைக்கு*
*இலக்கணம் வகுக்கும் யாப்பிலக்கணம்*
*அதில்*
*அளவடியோ*
*நெடிலடியோ*
*கழிநெடிலடியோ*
*எந்த வரியிலும்*
*அதாவது அடியிலும் வரலாம் என்று*
*தாராளம் காட்டியிருப்பது*
*புதுக்கவிதைக்கு*
*மறைமுகமாகக் கொடுத்த ஆரம்ப*
*வரவேற்பல்லவா?*

*ஆசிரியத் துறையை விடக் கீழ்வரும்*
*இணைக்குறள் ஆசிரியப்பா*
*கட்டுப்பாடுகள் இல்லாத*
*புதுக் கவிதையை*
*ஒத்திருக்கவில்லையா?*

*"பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்*
*துரவுக் களிறுபோல் வந்து*
*இரவுக் கதவுமுயல்*
*கேளே மல்லேங் கேட்டனம் பெரும*
*வோரி முருங்கப் பீலி சாய*

நன்வயல் வலைப்பட் டாங்கியா

முயக்குதொறு முயங்கு மறனில் யாயே”
(குறுந்தொகை)

இந்த இணைக்குறள் ஆசிரியப்பாவில்

2 சீர்கள் உள்ள குறளடி, 3 சீர்கள் உள்ள சிந்தடி, 4 சீர்கள் உள்ள அளவடி ஆகியவை விரவிக் கிடப்பது புதுக்கவிதையின் சாயலைப் புலப்படுத்தவில்லையா?

சந்தம் யாப்புக்கு மட்டும் உரியதல்ல;
கருத்து உணர்ச்சி ஒழுங்கிலும் சந்தம்
இருக்கிறது.
சந்தத்திற்குக் கருத்து
வளைந்து கொடுக்கத் தேவையில்லை;
மாறாகக் கருத்துக்குத்தான்
சந்தம் என்பது மேலே சொன்ன பாடலில்
கோடி காட்டப்பட்டிருக்கிறது.

மரபுகளே!
நீங்கள் இதனை அறிந்தும்
அறியாதவர்போல் நடிக்கிறீர்களா ?
அல்லது

உண்மையிலே உறங்குகிறீர்களா ?
உறங்குவது போல்
பாவனை செய்கிறீர்களா?

தொல்காப்பிய விதிகளுக்கு அப்பாற் சென்று
புதிய இலக்கணம் வகுத்த
புலவர் பெருமக்களின் துணிவு இன்றையப்
புதுக் கவிதையாளர்களிடமும் இருக்கிறது.

அதைப் புரிந்து கொண்டு
போற்றா விட்டால் போங்கள்;
புழுதிவாரித் தூற்றாதீர்கள் .

சூடுபோடப் போவதாகக் கையைச்
சொரியும் சூரர்களே ! அது
மூளை பலம் இல்லாத
முரடர்கள் தொழிலாயிற்றே!

“மரபுக்குக் கேடு என்றால்
மனம் பொறுக்க மாட்டோம் “
என்பவர்களே!
எத்தனை மரபுகள் உங்கள்முன்
இறந்து கிடக்கின்றன !
காப்பாற்ற நீங்கள்
கை நீட்டிய துண்டா?
கண் திறந்து பார்த்ததுண்டா?

எப்போதோ சில
விருத்தம்; சிந்து
வெண்பாக்கள் எழுதிவிட்டு
மரபுக் கவிதைகளின் காவலராய்
மார்தட்டிக் கொள்வதா?

குறளடி வஞ்சிப்பா
கொச்சகக் கலிப்பா
கட்டளைக் கலிப்பா
கலித்துறை கும்மி
மருட்பா வண்ணமெனும்
மரபுக் கவிதைகளை
என்றேனும் உங்கள்கை
எழுத முனைந்த துண்டா?
வஞ்சித் தாழிசையை

*வரவேற்றுப் படைத்ததுண்டா?*
*வாழ்த்து மடலேனும்*
*வாசித்த துண்டா நீங்கள்?*
*எட்டியும் பார்ப்பதில்லை ?*
*மரபுகள் நூறு*
*மரித்துக் கிடக்கின்றன*
*உங்கள் முன்!*

*உயிர் கொடுக்க*
*ஓடி வாருங்கள் ;*
*முடியாவிட்டால்*
*இந்தச் சாவுகளுக்குச்*
*சரமகவி பாடச்*
*சந்தத்தைத் தேடுங்கள்*
*வீணாகத் தீக்கோல் சுமக்கும்*
*வேலையைத் தேர்ந்தெடுக்காதீர்கள்!*
*தீ உங்கள் தீ*
*உங்கள் விரல்களையே*
*சுட்டு விடப்போகிறது!"*

இந்நீண்ட கவிதையில் தம் கருத்துக்களைத் தக்க சான்றுகளோடு முன்வைத்துத் தம் வாதத்தினை உறுதிப்படுத்துகிறார் கவிஞர் இக்பால். மரபுக்குக் கேடு செய்பவர்களுக்கு மாறாத சூடு வைக்கப்போவதாய் மிரட்டிய அமலதாசன் மூட்டிய தீ அவரையே சுட்டுவிட்டதை விவாதத்தின் மூலம் அறியமுடிகிறது.

கவிஞர் முருகதாசன் "இது குத்துவிளக்கு , அது கூரை நெருப்பு" என்னும் தலைப்பில் கவிதை எழுதி இலக்கியச்சர்ச்சைக்குள் இறங்குகிறார் (5.1.92.) இவர் ,

*"புதுமைக்குப் பூமாலை போடப் புகுந்து*
*பழமைக்குள் பத்திரம் தேடுவதேனோ?"*

எனக் கேட்கிறார். முருகதாசனின் கேள்வி பொருளற்றது. புதுமை என்பது பழமை யிலிருந்து பிறந்ததுதான்.புதுமை சுயம்புவாகத் தோன்றாது என்பதை உணர்ந்தவர் கவிஞர் இக்பால்.ஆகவே மரபிலக்கணம் புதுமையை வரவேற்கிறது என்று அமலதாசனுக்குப் பதிலளித்திருந்தார். இப்பதிலைத் திரித்துப் பழமைக்குள் பாதுகாப்புத் தேடுவதாக முருகதாசன் கூறியிருப்பது சற்றும் பொருந்தாது. குறை சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டது.

தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்துக்காட்டித் தம் மரபிலக்கணப் புலமையை வெளிப்படுத்திய முருகதாசன் "அரிசிக்குள் கல்லைப் பொறுக்கலாம் ;கல்லுக்குள் அரிசியைப் பொறுக்குவதா?" என்னும் கேள்வி மூலம் மரபினை அரிசி என்றும் , புதுமையைக் கல் என்றும் கருதுகிறார் என்பது தெளிவாகிறது. இந்த உவமையால் கவிதை என்பது கலப்படம் செய்யப்பட்ட பண்டமா? என்னும் கேள்வி எழுகிறது. விதிகளைக் கூறிய இலக்கணம் விதிவிலக்குகளைக் கூறியது ஏன்? முருகதாசன் இதனைச் சிந்திக்க மறந்துவிட்டார். முருகதாசனின் வாதம் இதற்கு விடை அளிக்கவில்லை. இலக்கண மீறல்கள் அல்லது விதிவிலக்குகள் புதுமைக்கு வழிவகுப்பவை என்று சிந்தித்த நம் மரபிலக்கணப் புலவர்களின் உள்ளம் முருகதாசனுக்கு நினைவில் வரவில்லை போலும்!

"ஓசை இன்பம் உடைய பாட்டுவகைகள் எல்லாரையும் கவர்வதால் அவை அதிகம் புழக்கத்தில் உள்ளன" என்று எழுதும் கவிஞர் முருகதாசன் வெறும் ஓசை இன்பத்தை மட்டும் கொண்டு கவிதையை மதிப்பிடுகிறாரா? கவிதைக்குப் பொருளும் முக்கியமல்லவா? அப்பொருளை உணர்த்தவே புதுமை பயன்படுகிறது என்பதை மறந்தரா? தாம் சந்தக்கவி பாடுவதில் வல்லவர் என்பதால் சந்தத்தினை அளவுகோலாகக் கொண்டு புதுக்கவிதையை மதிப்பிடுகிறார் என்றே எண்ணவேண்டியுள்ளது. ஆகவேதான் சந்தமுள்ள மரபினை ஏற்கிறார்.சந்தமில்லாத புதுக்கவிதையை ஏற்கமறுக்கிறார். மரபுக்கவிஞர்கள் புதுக்கவிதையை இலக்கணமற்றது என்று மயங்கி அதனை வெறுப்பதும், வரவேற்காமல் இருப்பதும் முருகதாசனின் பதிலிலிருந்து

தெளிவாகத்தெரிகிறது. முருகதாசனின் வாதம் கூர்மையாக இல்லை.

காலத்துக்கேற்ற புதுவடிவங்களை வரவேற்காதவர் முருகதாசன் ஆவார். இவரின் பதில் தனி மனிதத் தாக்குதலாக உருப்பெறுகிற அபாயத்தினையும் கொண்டுள்ளது. அழித்துவிடும் என்ற கண்ணோட்டத்தில் கூரை நெருப்பு என்று புதுக்கவிதையை முருகதாசன் உருவகப்படுத்தியிருந்தாலும் நெருப்பினைப்போல் வேகமாகப்பரவும்/ வளரும் என்னும் உட்பொருளையும் அது தருகிறதல்லவா?

முருகதாசனின் கவிதைக்கு மறுப்புத் தெரிவிக்க இக்பால் (12.1.92) அன்று “ காலிப் பானைகள்” என்னும் தலைப்பில் எழுதிய பதில், கூரை நெருப்பென்று புதுக்கவிதையை முருகதாசன் கூறுவதில் பிழையில்லை என்பதை ஒப்புக்கொள்வதுபோல் தோன்றினாலும், பழையனவற்றை எரித்துவிட உதவும் நெருப்புத்தான் என்று சாமர்த்தியமான முறையில் அமைந்துள்ளது.

*“ஆள்வசிக்க லாயக்கில்லாமல்*

*ஆயிரம் பொத்தல்களுடன்*

*ஆடிக்கொண்டிருக்கும்*

*பழைய கூரைகளைத் தரைமட்டமாக்கும்*

*திருநெருப்புத்தான் புத்துக்கவிதை”*

மரபுக்கவிதையைக் குத்துவிளக்கு என்று வருணித்திருக்கும் முருகதாசனுக்கு இக்பால் தரும் பதில் குத்துவிளக்குகளாலும் அழிவு ஏற்படலாம் என்பதனை நினைவூட்டுகிறது. விவாதம் காரசாரமாக வளர்ந்து கருத்துமோதல்களை ஏற்படுத்தினாலும் இக்பாலின் வாக்கு சாமர்த்தியம்/ வாக்குசாதுரியம் அவர் கட்சிக்கே நம்மை இழுத்துச்செல்கிறது. கீழே சான்று தரப்பட்டுள்ளது.( வாசகர் கடிதத்தில் மல்லிகா குரும்பையன் என்பவரும் இக்பாலின் கடித்ததை வரவேற்றுப் போற்றியிருந்ததை இவண் நினைவுகூரலாம்).

*“புதுக் கவிதையைக் கூரை*

*நெருப்பென்று சொன்ன*

*நெஞ்சமே கேள் .*

*நிகழ்காலப் புதுக்கவிதை*

*நீ நினைத்துக் கொண்டிருக்கும் கூரை*

*நெருப்பு மட்டுமல்ல ...... அது*

*கரையான்கள் அரித்துக்*

*காலாவதியான*

*கட்டடங்களை இடித்துத் தள்ளும்*

*புல்டோசர் என்றும் புரிந்துகொள்க!”*

மரபிலக்கணம் கற்று மரபுக்கவிதைகளை எழுதிவந்த இக்பால் புதுக்கவிதையை வரவேற்பதற்காக மாறிவரும் காலத்தோடு தம்மையும் மாற்றிக்கொண்டுள்ளதை அவருடைய பதிலிலிருந்து அறிகிறோம்.

*“உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்”*

*கல்லார் அறிவிலா தார்”*

என்னும் குறளை இங்கே நினைத்துப் பார்ப்பது நல்லது.விவாதம் என்ற நோக்கில் அவர் முருகதாசனின் கருத்துக்களை மறுப்பதில் நியாயமாகவே செயல்படுகிறார். முருகதாசன்

*“ஓசையை உண்டாக்கவே யாப்பு;*

*அது தரும் லயம், தாளம்*

*உணர்ச்சியை ஒலியாக்காமல் சந்தம் செய்வீரோ?*

*ஒளியை எழுத்தாக்காமல் பிறருக்குச்சான்றாக்குவீரோ ?*

*சந்தத்துக்குள் கருத்தைப் புகுத்துவது*

*சிறந்த கவித்துவம்*

*கருத்தை மட்டும் சொல்லத்தான் உரை அல்லது உங்கள் உரைவீச்சு”*

என்று எழுதியதை மறுக்கும் இக்பாலின் பதில் வாசகர்களையும் சிந்திக்கவைக்கிறது. செய்யுள்,கவிதை, புதுக்கவிதை ஆகிய மூன்றுக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துகிறது. அத்தோடு புலமைக்கும் கவித்துவத்துக்கும் உள்ள வேறுபாட்டையும் தெரிவிக்கிறது. மரபிலக்கணம் பற்றி அறியாத இளந்தலைமுறையினருக்கு இச்சர்ச்சை மூலம்

நிறையத் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. திறந்தமனத்துடன் இக்பால் அளிக்கும் பதில் கீழ்வருமாறு அமைகிறது.

*"கருத்துக்களை யாப்புக்குள்*

*கட்டுப்படுத்திக் காட்டுவதுதான் சிறந்த*

*கவித்துவமா? ஏற்றுக்கொள்ள இயலுமா?*

*மருத்துவம் ,சோதிடக்கலை ,கணிதம்*

*முதலியவற்றைச் செய்யுள்வடிவில்*

*அமைத்த முன்னோரின் திறமையைப்*

*புலமை என்று கூறுங்கள்;*

*கவித்துவம் என்று கூறாதீர்கள்.*

*கம்பனும் கலைமகளும் கைகொட்டி*

*எள்ளி நகைப்பார்கள் .*

*புலமை வேறு! கவித்துவம் வேறு!"*

இப்பதிலைப் படிக்கும் திறந்த மனமுடைய,நடுநிலை தவறாத திறனாய்வாளர் யாரும் கவிஞர் இக்பால் அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அமலதாசன், முருகதாசன் ஆகியோரால் இத்தகைய விளக்கங்களை முன்வைக்க முடியாமற்போனது ஏன்? ஆத்திரம் அறிவை மறைக்கும் என்பதாலா? உணர்ச்சிவசப்படும்போது அறிவு வேலை செய்யாது என்று முன்னோர்கள் கூறிவைத்ததன் உண்மையை இவர்கள் உணரவில்லையா? விவாதத்தில் இறங்கும்போது தேவையான தகவல்களைத் தக்க தருணத்தில் சரியான சான்றுகளோடு எடுத்துரைக்க இவ்விருவருக்கும் தெரியவில்லை. கோபம்கொண்டு தனிமனிதக் காழ்ப்புக்கு இடம்தந்து விடுகிறார்கள். புலமைக்கும் கவித்துவத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக் காட்டிய கவிஞர் இக்பால் முருகதாசனின் சொற்களைக் கொண்டே அவரை மடக்குகிறார். முருகதாசன்

*"வண்ணம் சிந்து ஆசிரியம் கலி வெண்பா*

*விருத்தம் என்று*

*பல இனங்களில் எழுதப்பட்ட சிங்கப்பூர்க் கவிதைகளை*

*நீங்கள் படிக்கவில்லை போலும்.*

*எல்லாவகைக் கவிதைகளும் எழுதினால்தான்*

*"கவிஞர்" என்று மார்தட்டலாம் என்று*

*எந்த இலக்கணம் சொல்கிறது ?*

*கவிச்சக்கரவர்த்திகள் எல்லாம் அப்படித்தானோ?*

*எழுதப்படாத மரபுகளை நீங்கள் எழுதலாமே!"*

என எழுதுகிறார். அதற்கு இக்பால்,

*"எழுதப்படாத மரபுகளை எழுதும்படி*

*எம்மை ஏன் அழைக்கிறீர்கள் ?*

*மரபுக்காவலாளிகளுக்கு அல்லவா*

*மடல்தீட்டவேண்டும்?"*

எனப் பதிலடி கொடுக்கிறார். இப்பதிலடி முருகதாசனின் சமகாலக்கவிதைப்போக்கு குறித்த அவரது அறியாமையையும், காலத்துக்கு ஏற்ற வகையில் அவர் தம்மை மேம்படுத்திக்கொள்ளாததையும், அவரின் பழமைவாதப் போக்கையும் தெளிவாகவே படம் பிடித்துக்காட்டுகிறது.

முருகதாசன், இக்பால் எடுத்துக்காட்டிய குறுந்தொகைப்பாடல் வழக்கொழிந்து போய்விட்டது என்று குற்றம் சுமத்துவதிலிருந்தே சங்க இலக்கியம்பற்றிய அவரின் புரிதலும் அறிவும் வெளிச்சமாகிவிடுகின்றன. மேலும் தனக்குத் தெரியாமல்போனதால் வழக்கொழிந்துபோனது எனக் கருதினாரா? அல்லது தான் படிக்காததால் வழக்கொழிந்துபோனது என்றாரா? இன்றும் சங்கஇலக்கியம் மக்கள் மத்தியில் மாணவர்கள் மத்தியில் தமிழறிந்தார் மத்தியில் வாழ்ந்துகொண்டுதான் உள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்புக்களின் வழியாக அகிலத்தாரிடமும் சென்றுகொண்டுதான் இருக்கிறது. உலக நடப்புப் புரியாமல் வழக்கொழிந்துபோய்விட்டது என விதண்டாவாதம் புரிகிறார்.

முருகதாசன் பல்வேறு சந்தக்கவிதைகளை எழுதினாலும்கூட எந்தச் சொல்லை எங்கு

பயன்படுத்தவேண்டும் என்பதைக்கூட மறந்துவிடுகிறாரா?புழக்கத்தில் இல்லாத ஒன்றைத்தான் வழக்கொழிந்தது என்று சொல்லும் வழக்குண்டு என்பது முருகதாசனுக்குத் தெரியாதா? அல்லது இக்பாலைத் தாக்கவேண்டும் என்ற நோக்கில் வழக்கொழிந்துபோய்விட்டது என்ற தவறான வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்துகிறாரா என்று சிந்திக்கவேண்டியுள்ளது. வாசகர் மனத்தில் இத்தனை கேள்விகளை எழுப்பும் முருகதாசனின் வாதத்திற்கு இக்பால் கீழ்க்காணுமாறு பதில் அளிக்கிறார்.

*“நாம் எடுத்துக்காட்டிய*
*குறுந்தொகைப் பாடல்*
*வழக்கொழிந்துபோயிருந்தால்*
*இன்றும் நாம் அதுபற்றி*
*எழுதிக்கொண்டிருப்போமா?*

*பொருந்தும் படியாய் எதையும்*
*புகழக்கூடாதா ?*
*ஓசைக்குறைபாடு*
*உள்ள காரணத்தால்தான்*
*முன்சொன்ன குறுந்தொகைப்பாடல்*
*அழிந்துபோயிற்று என்பது உங்கள்*
*அவசரத் தீர்ப்பு;உங்கள்*
*ஆத்திரத்தின் வார்ப்பு*

*எடுத்துக்காட்டிய குறுந்தொகைப்பாடல்*
*மரபு யாப்பில் மலர்ந்த பாட்டு!*
*அது அழிந்துபோனதாக*
*நீங்களே வாக்குமூலம் கொடுப்பது*
*உங்களுக்கே*
*வேடிக்கையாக இல்லை?”*

என்று முருகதாசனின் ஒவ்வொரு கருத்தையும் முறையாக மறுக்கிறார்.

அடுத்து, இக்கட்டுரையாளர் முன்பே கூறியதுபோல, முருகதாசன் சந்தத்திற்கு முன்னுரிமை கொடுத்துப்பேசும் போக்கும் இக்பாலின் அணுகுமுறையில் மறுத்துப் பேசப்படுகிறது. சங்கஇலக்கியம், வள்ளுவர் தந்த வான்மறையாம் திருக்குறள் போன்றவை நிலைத்துவாழ அவை கூறும் கருத்துக்களின் சிறப்பே காரணம் என்பது தமிழ்கூறும் நல்லுலகு அறிந்த உண்மை. இதனை மறந்துபோன முருகதாசன் சந்தமே இலக்கிய நிலைபேற்றுக்குக் காரணம் என விதண்டாவாதம் புரிவதால் உண்மையைப் புரிய வைக்கவேண்டிய கடப்பாடு இக்பாலுக்கு ஏற்படுகிறது.ஆகவே அவர் கீழ்க்காணும் கருத்துக்களை முன்வைத்து வாதிடவேண்டியுள்ளது.

*“ஒரு கவிதை நிலைத்துவாழ*
*அழகான சந்தமே அடிப்படை என்றால்*
*குறள்யாப்பைவிட அழகான சந்தங்களில்*
*அமைந்த ஆயிரமாயிரம் கவிதைகள்*
*அழிந்துபோனதேன்?*
*விளக்கம் தெரியுமா?*

*வள்ளுவன் வரைந்த*
*வாகார்ந்த திருக்குறள்*
*காலங்களை வென்று*
*கலையாமல் நிற்பதற்கு அதன்*
*கருத்துக்களே அடிப்படை!”*

இக்பால் முருகதாசனின் வாதத்தைச் “சவலை வாதம்” என்று சமத்காரமாகப் பெயரிட்டு அழைக்கிறார். உண்மையில் இவ்வாறு அழைப்பது மிகவும் பொருந்துவதே. இப்பெயருக்குரிய காரணமும் இக்பாலின் பதிலிலேயே அடங்கியுள்ளது.

*“சந்தம் என்பது உங்களின்*
*சவலை வாதம்!*
*ஓசையை அதிகப்படுத்த*
*உள்ளே இருந்த “ உணவைக்”கீழே*

*கொட்டிவிட்டுக்*

*காலிப் பானைகளைக் கைகளில்*

*ஏந்தித் திரிகிறார்கள் பலர்*

*கவித்துவம் என்கிறீர்கள் நீங்கள்!"*

சவலை என்பது போதுமான வளர்ச்சி இல்லாத குறைந்த வளர்ச்சி நிலையைக் குறிக்கும். ஆகவே தான் போதுமான வளர்ச்சியை அடையாத குழந்தைகளைச் சவலைக்குழந்தைகள் என்று அழைக்கும் வழக்கமும் உள்ளது.

தம் கருத்தை முருகதாசன் ,அமலதாசன் போன்ற கவிஞர்களுக்கு மீண்டும் வலியுறுத்தும் கவிஞர் இக்பால்,

*"மீண்டும் கூறுகிறோம்*

*யாப்பிலக்கணம் புதுக்கவிதையை*

*ஆதரிக்கிறது !*

*கருத்து வெளிப்பாட்டுக்கு*

*இடையூறாக இருக்கும்*

*எதுகை மோனைகளை*

*விட்டுவிடச் சொல்கிறது !*

*யாப்பிலக்கணத்தில் ஆதாரம் தேடுவது*

*ஏன்? என்று கேட்கிறீர்களா?*

*காரணம் இதுதான் :*

*"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால்*

*வாழ்ந்தவர்கள் மட்டுமே*

*அறிவாளிகள் " என்னும்*

*பாமரத்தனம் கொண்ட "மரபுகள்"*

*பலர் நம்மிடம் இருக்கிறார்கள்!*

*சரிதானா? "*

என்று தம் கவிதையை முடித்திருக்கிறார். "அறிவாளிகள் அறிவாளிகள் தாம் " என்று எழுதிய அமலதாசனுக்கும் ஓங்கி ஓர் அறை கொடுப்பதுபோல முடித்துள்ளார் இக்பால்.

உரைக்கவிதை என்னும் தலைப்பில் *1.12.91* அன்று ஞாயிறு முரசில் தி.சு.மோகனம் புதுக்கவிதையைப் பொன் போர்த்திய நகை என்று குறிப்பிட்டார். அதனைக் கவிதை என்று ஏற்காமல் போலிக்கவிதை என்று கருத்துரைத்தார். அதற்கு இக்பால் " நான் விளங்கிக் கொண்டது சரிதான் என்றால் புதுக்கவிதை எதனால் போலிக்கவிதை ஆகிறது என்னும் கேள்வி எழுகிறது " என்று தொடங்கித் தம் மறுப்பைத் தெரிவிக்கிறார். இதனை "விருந்து " என்னும் தலைப்பில் தமிழ்முரசு ( *05.01.92*) வெளியிட்டுள்ளது.

*"போலி என்பது தோற்றத்தில்*

*ஒற்றுமையையும் உள்ளடக்கத்தில்*

*வேற்றுமையையும் கொண்டது.*

*புதுக்கவிதையோ யாப்புக்கவிதையின்*

*எந்தப் புறவடிவத்தையும் போர்த்திக்கொண்டு*

*நிற்கவில்லை. அது, உள்ளடக்கத்தில்*

*மட்டுமே கவனம் செலுத்துகிறது;*

*கவிதையின் பிற அணிகளைத் தாங்கி*

*நிற்கிறது, .யாப்பை விலக்கிய கவிதை*

*என்பதை உணர்த்தப் புதுக்கவிதை என்னும்*

*பெயரை ஏற்றுக்கிறது.*

*யாப்பு என்பது கவிதையின் புறத்தோற்றமே!*

*புறத்தோற்றத்தை விளக்கிய புதுக்கவிதை*

*எவ்வாறு பொன் போர்த்திய நகையாகிறது?*

*யாப்பு இருந்தால்தான் கவிதையா?*

*சில வசனங்களை வெறும் கருத்து*

*நவிற்சிகளை அப்படியே கூட்டல்*

*குறைத்தல் இன்றி யாப்புக்குள்*

*கொண்டுவரமுடியும்.*

*இவ்வாறு யாப்புக்குள் அடங்கும்*

*வெறும் வசனத்தைக் கவிதையென்று*

*அழைக்க முடியுமா? நிச்சயமாக*

*முடியாது. எனவே யாப்பு மட்டுமே*

*கவிதையாகிவிடாது.*

*கவிதை மலர், யாப்பு வேலிக்கு*

*வெளியிலும் மலரும்.*

*காலம் எல்லாத் துறைகளிலும்*

*மாற்றங்களையும் வளர்ச்சியையும்*

*கொண்டு வந்திருக்கிறது.*

*கவிதை மட்டும் மாறாமல் அப்படியே*

*இருக்கவேண்டும் என்று நாம்*

*கட்டாயப்படுத்துவதும் சட்டம் போடுவதும்*

*காலத்தின் காதில் விழாது.*

*திரு.பெல் (Bell) அவர்கள்*

*கண்டுபிடித்த ஆரம்பகாலத் தொலைபேசிபோல்*

*இன்றையத் தொலைபேசியின் வடிவம்*

*இல்லை. அதற்காக இன்றைய நவீனத்*

*தொலைபேசியைப் போலித் தொலைபேசி*

*என்று நாம் அழைப்பதில்லை.*

*தண்ணீர் எதிலிருந்து கிடைத்தாலும்*

*அது நன்னீராக இருப்பதே முக்கியம்.*

*புதிய வடிவங்களை விருந்தாக*

*ஏற்றுக்கொள்கிறது தொல்காப்பியம்.*

*புதுக்கவிதை தமிழுக்குக் கிடைத்த*

*புதிய வடிவம்;விருந்து.அதைப்*

*போலி என்று சொல்வது*

*புண்படுத்துகிறது.*

*“விருந்தே தானும்*

*துவது புனைந்த யாப்பின் மேற்றே “ (தொல்காப்பியம் 540)*

என்று தெளிவாகவும், அழகாகவும், பொருத்தமாகவும் விளக்கி திரு தி.சு.மோகனம் அவர்களுக்குப் புதுக்கவிதையைப் போலிக்கவிதை அன்று எனப் புரியவைத்திருக்கிறார் . இத்துடன் மரபுக்கவிதை, புதுக்கவிதை குறித்த சர்ச்சை முடிவடைகிறது. ஆயின் 12.01.92 அன்று நாச்சம்மா தேவராஜன் என்னும் மாணவி ‘பாடம்’ என்னும் தலைப்பில் போலியான கவிதை வடிவத்தில்,

*“மனிதன் மட்டும் மாறும்போது*

*மரபு மாறுவது தவறு என்பது*

*மண்டைக்குள் இருக்கும் மூளையை மறப்பது”*

*எனவும்,*

*“மரபு பெரிதா புதியது பெரிதா என*

*மண்டையை உடைத்துக் கொள்வது மதியீனம்”*

எனவும் அதிகப்பிரசங்கித்தனமாக எழுதுகிறார். இவர் இலக்கியச்சர்ச்சையின் நோக்கத்தை அறியவில்லை. வை.திருநாவுக்கரசு அவர்களுக்கும் , சர்ச்சையில் கலந்துகொண்ட கவிஞர்களுக்கும் மரபின் வழி வந்தது புதியது என்னும் உண்மை நன்றாகவே தெரியும். ஏதோ தன் பெயர் தமிழ்முரசில் வெளிவரவேண்டும் என்ற நோக்கத்தில் எழுதியிருக்கவேண்டும். விவாதத்தில் ஒரு பெண் கருத்துரைக்கிறார் என்று கருதி இதனையும் தமிழ்முரசு பிரசுரித்திருக்கவேண்டும்.

இவ்விவாதத்தில் கலந்துகொண்ட மற்றொரு பெண் ஞானப்பிரகாசம் மோனிக்கா. இவர் புதுக்கவிதைகளை எழுதியவர். இவருக்கும் இலக்கியச்சர்ச்சையின் நோக்கம் புரியவில்லை. “வாதம் வம்புகள் தேவைதானா?” என்கிறார். வை.திருநாவுக்கரசுவுக்குத் தேவைதான். பத்திரிகையைப் படிக்கும் வாசகர்கள் பெருகவேண்டும். பத்திரிகையின் வாயிலாகப் புதிய திறமைகள் அடையாளம் காணப்படவேண்டும் என்றெல்லாம் பல நோக்கங்கள் அவருக்கு இருந்தன. இவை புரியாமல் எழுதும் மோனிகா குழந்தைப்பாடலின் அடியையும், திரைப்பாடலின் அடியையும் இரவலாகப் பெற்றுத்தான் எழுதுகிறார். ஆனால் தன்னைப்போன்று வளரும் புதுக்கவிஞர்கள் முளையிலேயே கருகிவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் மரபுக்கவிஞர்களிடம்,

*"வானத்திற்குச் சொந்தமானவை விண்மீன்கள்*

*அதில் புதிய விண்மீன் இது என அடையாளம் கண்டு*

*அழிக்க நினைத்துத் தோற்றுப்போகாதீர்கள்.*

*மரபு மரபுதான்*

*மரபுக்குச் சொந்தமான புது என்ற*

*சொல்லை எரிக்க நினைக்காதீர்கள்"*

என வேண்டுகோள் விடுக்கிறார்.

## கவிதைச்சர்ச்சையால் விளைந்த நன்மைகள்

தமிழ்முரசு அலுவலகம் லாவெண்டர் வீதியில் இயங்கிக்கொண்டிருந்த சமயத்தில்தான் கவிதைகுறித்த விவாதம் நிகழ்ந்தது. இவ்விவாதத்தின் முடிவில் மரபு இலக்கணம் கற்றுக்கொள்ள விருப்பமுடையோர் தமிழ்முரசைத் தொடர்புகொள்ளலாம் எனவும், யாப்பிலக்கண வகுப்புகள் நடத்தப்படும் என்று தமிழ்முரசு அறிவித்தது. இவ்வகுப்புக்களை கவிஞர் இக்பால் சில வாரங்களுக்கு நடத்தினார். (கவிஞர் இக்பால் அவர்களுடன் 21.11.17 அன்று தொலைபேசி வழி நடத்திய உரையாடலின்போது பெற்ற தகவல்). புதுக்கவிதையின்பால் ஈர்க்கப்பட்டுச் சிலர் புதுக்கவிதைகள் எழுதத்தொடங்கினர்.

## முடிவுரை

- ❖ கவிதை குறித்த இலக்கியச் சர்ச்சையால் பெரும்பான்மையான தமிழ் எழுத்தாளர்களின் மனப்போக்கும் ,தமிழ் இலக்கியச் சூழலும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட்டன.
- ❖ யாப்பிலக்கண வகுப்புகள் நடத்தி மரபுக்கவிதைகள் குறித்த புரிதலை வளர்த்ததோடு புதுக்கவிதை எழுதுவதற்கான களமும் உருவாக்கித் தரப்பட்டது.
- ❖ விவாதம்புரிவது தனிமனிதச் சாடலன்று என்பதும் , சுயபுராணம் பாடுவதற்கான களம் அன்று என்பதும் அறிந்துகொள்ளப்பட்டன.
- ❖ கவிதைகுறித்தஇலக்கியச்சர்ச்சையின் உயர்ந்த நோக்கம் புரியாமல் கவிஞர்கள் சண்டையிடுகிறார்கள் எனத் தவறாகப் புரிந்துகொண்டு சண்டை வேண்டாம் என அதிகப்பிரசங்கித்தனமாக எழுதிய இளையர்களும் விவாதக்களத்தில் இறங்கினர்.
- ❖ பெண்கள் இருவர் விவாதத்தில் ஈடுபட்டாலும் இருவருக்கும் சுயசிந்தனை இல்லை என்பது அவர்தம் கருத்துக்களின் வாயிலாகத் தெளிவாகிறது.
- ❖ ஒருவரின் கருத்து விளம்பரம் தேடும் முயற்சியாகவும், மற்றொருவரின் கருத்து சண்டையைத் தவிர்த்துச் சமரசம் செய்விப்பதாயும் , வளரும் கவிஞர்கள் முளையிலேயே கிள்ளி எறியப்படக்கூடாது என வேண்டுவதாயும் அமைகிறது.

---

## References


Krishnasamy, P. (1995). *Puthumaipittan Ilakiyatadam*. Bengalore: Kavya Publications.

*Kurunthogai*.

*Singapore Tamil Ilakiya Varalaru-Oor Arimugam*. (2011). Singapore: Eluthalar Kalagam.

Srilaxmi, M., S. (2006). *Puthumaipittan Ilakiya Sarcaikal 1951-1952*. Singapore: Tharumu Publications.

*Tamil Murasu* News Paper. (1991-1992).

*Tholkappiyam*.